செய்தி வெளியீடு எண்: 403 நாள் : 13.08.2015

**அடித்தளமக்களின் நலன்களைப் பேணிக்காப்பதில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகவும் பிற மாநிலங்களுக்கு முன்னோடியாகவும் திகழ்கிறது, துறைத்தலைவர்கள் பங்கேற்ற ஆய்வுக்கூட்டத்தில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தகவல்**

வருவாய்த்துறையின் சார்பில், வருவாய் நிருவாகம், நில நிருவாகம், நில சீர்திருத்தம், நில அளவை மற்றும் நிலவரித்திட்டம், நகரப்புற நிலவரித்திட்டம், நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி, பேரிடர் மேலாண்மை ஆகிய துறைகளின் சார்பில் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்டங்கள், அவற்றின் செயல்பாடுகள், நிறைவேற்றப்பட்டுள்ள சாதனைகள் குறித்து, துறைத் தலைவர்கள் பங்கேற்ற ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. ஆர்.பி.உதயகுமார் அவர்கள் தலைமையில் இன்று (13.08.2015) தலைமைச் செயலகம் கருத்தரங்கக் கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வருவாய்த்துறை செயலாளர் திரு. இரா.வெங்கடேசன் இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறை செயலாளர் மற்றும் நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி ஆணையர் திரு ப. அண்ணாமலை, இ.ஆ.ப., சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் (பொறுப்பு) திரு.பிரதீப் யாதவ் இ.ஆப., நில அளவை மற்றும் நிலவரித் திட்ட ஆணையர் திருமதி ஆர். வாசுகி இ.ஆ.ப., வருவாய் நிருவாக கூடுதல் ஆணையர் முனைவர் மு.ஜெயராமன் இ.ஆ.ப., பேரிடர் மேலாண்மை இணை ஆணையர் திருமதி ஆர். லில்லி இ.ஆ.ப, நில சீர்திருத்த இயக்குநர் திருமதி வ. கலையரசி, இ.ஆ.ப., வருவாய்த் துறையின் கூடுதல் செயலாளர்கள், இணைச் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தமது தலைமை உரையில், "மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான ஆட்சியில் வருவாய்த்துறைக்கு பொற்காலம் என்று குறிப்பிட்டால் அது மிகையில்லை. வருவாய்த் துறையின் வரலாற்றில் இதுவரையில் இல்லாத வகையில், கடந்த நான்காண்டுகளில் 391 கோடி ரூபாய் செலவில், கட்டப்பட்டு வரும் 351 கட்டடங்களில் ஏறத்தாழ 200 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் தஞ்சை, கடலூர் ஆகிய மாவட்டங்களுக்கான ஒருங்கிணைந்த மாவட்ட பெருந்திட்ட வாளகங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் அண்மையில் திறந்து வைத்தார்கள். மேலும், திருப்பூர் மாவட்டத்திற்கான ஒருங்கிணைந்த மாவட்ட

பெருந்திட்ட வளாகம், கோயம்புத்தூர், நீலகிரி, கன்னியாகுமரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில், கூடுதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள், மற்றும் குடியிருப்புடன் கூடிய வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், வருவாய் ஆய்வாளர் அலுவலகங்கள் உள்ளிட்ட கட்டடங்களின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 8000 கிராம நிருவாகக் கட்டடங்களின் புனரமைப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொது மக்கள் தங்கள் கோரிக்கைகள் தொடர்பாக வருவாய்த்துறை அலுவலகங்களை விரைந்து அணுகிட ஏதுவாக, புதிய வட்டங்கள் மற்றும் வருவாய் கோட்டங்கள் உருவாக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்தார்கள். அதன் அடிப்படையில், கடந்த நான்காண்டுகளில் 4 புதிய வருவாய் கோட்டங்களும், 49 புதிய வருவாய் வட்டங்களும் உருவாக்கப்பட்டு சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. இவற்றில் ஐந்து புதிய வட்டங்களுக்கான அரசாணை விரைவில் பிறபிக்கப்படவுள்ளன.

அனைத்துத் தரப்பு மக்களையும் வெகுவாக கவர்ந்துள்ள திட்டம் "அம்மா" திட்டமாகும். அண்டை மாநிலங்களும் வியந்து போற்றுகின்ற வகையில் வருவாய்த் துறையின் சார்பில் இத்திட்டமானது செம்மையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முழுவதும் மூன்று கட்டங்களாக நடைபெற்ற 27,431 முகாம்களில் 47,76,716 மனுக்கள் பெறப்பட்டு, அவற்றில் 46,97,190 மனுக்களின் மீது உடனடித் தீர்வு காணப்பட்டு, சரித்திர சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

நில நிர்வாகத் துறையின் சார்பில், ஒவ்வொரு ஆண்டும் வீடற்ற ஏழை எளிய மக்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டு வருகிறது. கடந்த நான்காண்டுகளில் 7 இலட்சம் இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அதனை விஞ்சிடும் வகையில், 8,52,534 பட்டாக்கள் வழங்கி சாதனை படைக்கப்பட்டுள்ளது. மேலும் 50,92,844 விரைவு பட்டா மாறுதல் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், ஏறத்தாழ 4,300 கோடி செலவில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள 32 இலட்சம் நபர்களுக்கு 8 வகையான மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், நாளதுவரையில், 1.35 கோடி மகளிருக்கு விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறிகளும், 1.74 கோடி நபர்களுக்கு விலையில்லா வேட்டி சேலைகளும் வருவாய்த்துறையின் சார்பில் வழங்கப்பட்டுள்ளன.

நிலஅளவைத்துறையின் சார்பில், 93 விழுக்காடு நத்தம் நில அளவை ஆவணங்கள் மற்றும் 98 விழுக்காடு நகர்புற நில ஆவணங்களை கணினிமயமாக்கிடும் பணியில் ஏறத்தாழ 54 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும் சென்னை மாவட்டத்திலுள்ள 10 வட்டங்களில் 3.76 இலட்சம் நகர்புற நில ஆவணங்களும் முழுமையாக (கூளுடுசு) கணினிபடுத்தப்பட்டுள்ளன.

அரசின் பிற துறைகளுக்கெல்லாம் தாய்த்துறையாக விளங்கிடும் இந்த வருவாய்த்துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் அனைத்தும், உரிய நேரத்தில்; உரிய மக்களை சென்றடைந்திட வேண்டும் என்கிற உயரிய நோக்கத்தில் நாம் அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றி, பாரம்பரியமிக்க இந்த வருவாய்த் துறைக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சிக்கும் பெருமை சேர்த்திடும் வகையில் பணியாற்றிடவேண்டும்" என்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

வருவாய்த்துறை, செயலர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**